RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22431

OPEN ACCESS

# கவிஞர் வாலியின் படைப்புகளில் சமூக சிந்தனை

வீ. பாரதிராஜா [அ, *], வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர் [அ]

தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, (சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), சென்னை-600030, தமிழ்நாடு இந்தியா.

# Social Thought in the Works of Poet Vaali

V. Bharathiraja [a, *], Va.Mu.Se. Muthuramalinga Andavar [a]

[a] Department of Tamil, Pachaiyappa's College, (Affiliated to University of Madras), Chennai-600030, Tamil Nadu, India

* Corresponding Author: vbharathi3689@gmail.com

Received: 11-06-2022
Revised: 25-08-2022
Accepted: 03-09-2022
Published: 16-10-2022

Check for updates

**ABSTRACT**

Millions of people all over the world are still listening to Vaali's songs every day. Poet Vaali has carved a niche for himself in the film industry for more than 60 years as a film lyricist. Vaali entered the film industry when Kannadasan was ruling the industry with his songs and became famous for composing songs on par with Kannadasan's songs. He has written a variety of songs such as traditional poetry, new poems, and musical compositions, and made them fly the flag of success. He is also able to deal with social ills and social problems with a view to creating social awareness. The poet Vaali is someone who can use film songs and poetry as a good means of communication. This article explores how he has approached social evils and social woes in his works with his rich vocabulary.

**Keywords:** Poet Vaali, Traditional Poetry, Mordern Poetry, Communication,

## முன்னுரை

தமிழ்த்திரை உலகம் கண்ட முக்கிய படைப்பாளிகளுள் ஒருவர் கவிஞர் வாலி. கற்பனை ஊற்றில் உருவாகும் கவிதைகளால் காற்றைக் காதலிக்கலாம், வானத்தை வசப்படுத்தலாம். வானத்துக்கும் பூமிக்கும் வாமன அவதாரம் எடுக்கலாம். சமுதாய நாட்டம் கொண்ட கவிஞர்களில் இவரும் ஒருவர். வார்த்தைகள் இவரை வாவென்று அழைக்கும். அழைக்கின்ற வார்த்தைகளை எல்லாம் இவர் ஆதரிக்காமல் சமூகத்திற்கு தேவையான எளிய சொற்களை வாக்கியங்களாக கோர்த்தவர். வாலியின் படைப்புகள் பல. இவற்றில் சமுதாய நலத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட படைப்புகளை மட்டும் எடுத்தாய்வதை இக்கட்டுரையின் கீழ்க்காண்போம்

## மத நல்லிணக்கம்

வேற்றுமையில் ஒற்றுமை கண்ட நாடு நமது இந்தியா. பல்வேறு மத இன சாதி வேறுபாடுகளை மக்களிடையே பரப்பி ஆதாயம் பெறுகின்றன. மண்ணில் உள்ள மனிதர்கள் யாரும் என் சொந்தம் என நேசிக்கிற கவிஞர் வாலி தங்களின் பதவி மோக சுயநலத்திற்காக மக்களிடையே மத வெறியைத் தூண்டி அவர்களுக்குள் சண்டையிட்டு கொண்டு அழியுமாறு செய்யும் அரசியல்வாதிகள் இருக்கும்வரை இம்மதவெறி ஒழியாது இது நாலு காலிகளின் நாற்காலி ஆசை (Vaali, 1995). என கடுமையாகச் சாடுகிறார். மதவெறியினால் ஒரு மதத்தினர் புனிதமாகக் கருதும் இடத்தினை மற்றவர் இடிப்பதாலும்,

சமூக அமைதிக்கு பங்கம் ஏற்பட்டு மதக் கலவரங்கள் சமூகத்தில் நிகழ்கின்றன என்பதைக் குறிக்கும் விதமாக

மதூதியை

மண்ணில் பார்த்ததில்

மானக் கேடு

நபி நாயகத்திற்கல்ல

ஜனநாயகத்திற்கு

சனநாயகம் கேவலப் படுகின்றது என வருந்துகிறார் (Vaali, 1995). சுதந்திர இந்தியாவைப் பெற மதம் கொண்டு நிற்காமல் எல்லோரும் இந்தியர் என்னும் ஒற்றை அடையாளமாய் யாவரும் நின்றதனால் ஆங்கிலேயரை எதிர்த்து வெல்ல முடிந்த நாட்டில் மதவெறித் தலை தூக்குவது சனநாயகத்திற்கு மானக்கேடு என்கிறார். மதத்தின் பேரில் எது வந்தாலும் அதை முனையிலேயே கிள்ளி எறிய வேண்டியது ஒவ்வொரு மானுட நேசிப்பாளர்களின் கடமை ஆகும்.

ஒரு சமுதாயத்தில் வாழ்வும், மதமும் மற்றவர்களால் ஆபத்துக்குள்ளாகி இருக்கின்றது. தீவிரவாதமே அவர்கள் பாதுகாப்புக்கான ஒரே வழி என்று அவர்களை நம்பி வைத்து நசுக்கப்படும் உணர்வை மதப்போர்வையிலிருந்து தூண்டி விடுபவர்கள் அரசியல்வாதிகளே என்ற முனைவர் அருணாசல் அவர்களின் கருத்து இன்றியமையாதது.

மதத் தலைவர்களும், மதவெறியர்களும் தமது சுய நலனுக்காக அப்பாவி மக்களைக் கொள்கின்றனர். அன்பைப் போதிக்க வேண்டிய மதங்கள் மார்க்கங்கள், ஏழை எளிய பிள்ளைகளிடம் இளைஞர்களிடம் மூளைச் சலவை செய்து மத வெறியூட்டுகின்றனர் என்கிற பேராபத்தை இன்று உலகம் அறிந்து கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

புனிதமானது பிறை; அதில்

பூசலாமா புண்ணீர் கறை

அங்ஙன மாயின்

அதனை

அங்கிகரிக்குமா

அளவற்ற அருளாளனான இறை (Vaali, 2018)

என்று மதத்தின் பேரில்மாற்றினத்தைச் சேர்ந்த மக்களைக் கொல்வது மார்க்க நெறி அல்ல என்று வெளிப்படுத்துகிறார் வாலி. தமிழக மண்ணானது சற்று வேறுபட்ட மண் என்பதை எங்களூர் எலெக்டீரிக் ரயிலில் ஹக்கீம் பாய் கையில் ஹிண்டு, முத்துச்சாமி அய்யர் கையில் முஸ்லிம் முரசு, நேசமணி ஜோசப் கையில் ஞானபூமி என்று வாலி குறிப்பிடத் காரணம் நீதிக்கட்சியினரால் சர்பிடிதியாகராயர் பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற சமூகநீதியை விதைத்து மத நல்லிணக்க பூமியாக தமிழகத்தை மாற்றியப் பங்கு குறிப்பிடத்தக்கது. மனித இனம் சமயப்பொறையுடன் விளங்க கவிஞர் வலியுறுத்துகிறார் (Vaali, 1995).

## சாதிக் கொடுமை

சமுதாயத்தை மேம்படுத்த முனைந்து அதற்காகவே உழைக்கின்ற தோன்றல்களை நிறம், மதம், சாதி என்று பெயரால் வெறித்தனப் பற்றாளர்களது. பார்க்கப்படுவது வேதனைக்குரியது, சாதியின் பெயரால் சகமனிதனை இழிவாகப் பார்ப்பது, அவமானப் படுத்துவது, ஏளனம் செய்வது, உருவத்தை வைத்து நினைப்பது, வறுமையை வைத்து அடிமைப் படுத்துவது என எல்லா தீங்கின் ஊற்றாக சாதி என்னும் கொடிய நோயை அப்புறப்படுத்தவே மண்ணில் அன்பு நல நூல்களும், அறிவுரைகளும்,

நற்கவிதைகளும் காலந்தோறும் நல்லவர்கள் எழுதி வைத்தாலும் அத்தனையும் படித்துக் கொண்டே, மற்றவர்களுக்கு உபதேசம் செய்துக்கொண்டே சாதியை வளர்த்து வருவதை காண்கிறோம் (Paramasivanandham, 2019). சான்றாகதேர்தலில் நிற்கும் அரசியல்வாதி நீங்கள் என்னை தேர்ந்தெடுத்தால் என்னவெல்லாம் செய்வேன் என அடுக்கிக் கூறுகிறார் ஜாதிகளை ஒழிப்பேன், வீதிகளில் உள்ள ஜாதிப் பெயர்களை அழிப்பேன், ஜாதி என்ற வார்த்தை உள்ள பக்கத்தை அகராதியிலிருந்து கிழிப்பேன் என வீரவேசமாக முழங்குகிறார் உணர்ச்சி பொங்க சூளுரைக்கிறார். நீ அந்த ஜாதி. நான் இந்த ஜாதி எனப் பேசுகிறவர்களால்தான் நாடு கெட்டுவிட்டது என முடிந்த முடிவாகக் கூறி எனவே ஜாதியற்ற சமுதாயம் படைக்க எனக்கே ஓட்டுப்போடுங்கள் என வாக்காளர்களிடம் வேண்டுகோள் விட்டு, கடைசியாக தாழ்த்தப் குரலில் வேட்பாளர் கூறும் வகையில் கவிஞர் பின்வருமாறு பாடியுள்ளார்.

நினைவில் இருக்கட்டும்

நான்

உங்கள்

ஜாதிக்காரன்

என வாக்களர்களிடம் சாதியை ஒழிப்பதாக கூறியவர் பின்பு சாதியை நினைவூட்டி வாக்குகள் கேட்கும் இழிநிலையை, தேர்தல் காலத்தில் நடக்கும் அரசியல் சாதித் தில்லுமுல்லுகளை தமக்கே உரிய முறையில் நயமாக சுட்டிக்காட்டியுள்ளார் (Vaali, 2013).

தொடக்க காலத்தில் மனிதனுக்குத் தன்னுடன் சேர்ந்து உயிரோடு உயிராக வாழ்கின்ற உறவுகளை அறிந்து கொள்ளும் ஆற்றல் வாய்க்கப் பெறவில்லை. நாளாக நாளாக அறிவு வளர்ச்சி பெற்றதன் விளைவாக பல்வேறு வழிகளிலும் தன்னை மேம்படுத்தி கொண்ட மனிதன், தன்னோடு இணைந்த இரத்த உறவுகளையும் நேசிக்க தொடங்கினான். தனிமரம் தோப்பாகாது என்ற தன்மையில் ஒரு குறிப்பிட்ட உறவுகளை தன்னோடு இருத்திக் கொண்டான். உடனே தனிமனிதனாக வாழ்ந்தவனுக்கு கிடைக்காத இன்பமும் மகிழ்வும் கூட்டாக வாழும் உறவுகளுக்கிடையே கிடைப்பதை அறிந்து கொண்டான். அன்பு, பாசம், காதல், பிரியம், நேசம் என்னும் பல்வேறு சொற்களால் அந்த உறவுகளுக்கு மேலும் வலுச்சேர்த்துக் கொள்ளும்போது சாதி தன் மூக்கை நுழைத்து மனங்களைக் கலைக்கிறது.

சேர்ந்து வாழும் உறவுகளிடையே ஒன்றிமில்லாத போது, சமூகம் திணித்த சாதிய வேறுபாடுகள் ஒரு பெரும் பிரச்சினையாகப் பார்க்கப்படுகின்றது.

நான்...நான்...ப்ராம்ணனே இல்லை! என்று சொல்லி தலை குனிந்தான்.

என்னடா சொன்னே...? என்று நம்பூதிரி

குனிந்த தலையை மெல்ல நிமிர்த்தி குரு பேசினான்"

"நான் பறையன்"

தரங்கினிக்கு தூக்கி வாரிப்போட்டது; கோவிந்த நம்பூதிரி நெருப்பாய் கொதித்தார்

"அடேய் சத்யபிரமாணவாடா சொல்றே?"

"ஆமாம்! நாதீல நான் ஒரு ஹரிஜன்"

என்பதை கவிஞர் வாலி தன் சிறுகதையில் ஒரு பிராமண இசைசொல்லி தருபவரிடம் சேர்ந்து கற்கும் கருப்புக்குட்டி என்ற பறையர் சமூக பையன், அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்திருந்தாலும் கோவிந்த நம்பூதிரிக்கு தன் சாதிய கௌரவத்தால் நெடுநாள் தனக்கு உற்ற துணையாக இருந்தவனையே இழிவாய் பார்க்கும் நிலையில் மாறுகிறார். தன் மகளுக்கு அவனை கட்டி கொடுக்க நினைத்தவர் சாதி அறிந்த பின்பு மனம் மாறி மறுக்கிறார் என சாதியின் கொடூர தன்மையினை எடுத்துக்காட்டியுள்ளார்.

## மகளிர் மேம்பாடு

பெண்மை என்பது பெண்தன்மை. கற்பு, அன்பு, பொறுமை, தியாகம் என்ற பல்வேறு பண்பு நலன்களையும் உள்ளடக்கியவளே பெண். சமுதாயத்தில் பெண் உயர்ந்த நிலையில் இருந்ததற்கான ஆதாரமாக குறியீடாகத்தான் நாடு, மொழி, மண், மரம், கடல், நதி என்று அனைத்தையுமே பெண்ணின் வடிவாய்கண்டு வணங்கினோம். ஆதிகாலத்தில் உமர்ந்து திகழ்ந்த பெண் சமுதாயம் தந்தை வழி தலைமையினால் மெல்ல மெல்ல அடிமைப்படுத்தப்பட்டது.

இராஜாராம் மோகன்ராய், காந்தியடிகள், பெரியார், அம்பேத்கார் அண்ணா, பாரதியார், பாரதிதாசன், கலைஞர், முத்துலட்சுமி ரெட்டி என சமூக சீர்திருத்தவாதிகள் பெண்ணிய விடுதலைக்கு வாதிட்டனர். பெண் அடிமையானதற்கு முக்கிய காரணமாகக் கருதுவது பெண் கல்வி இல்லாதிருப்பதே என சான்றோர் கருதி பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று

எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைபோமென்ற

விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்

கல்வி மறுக்கப்பட்டதாலே பெண்ணினம் வழி கோலியது என்று சீர்திருத்தவாதிகள் பெண்களை கல்வி கற்க ஊக்கமூட்டினர் (Bharathiyar, 2011). கவிஞர் வாலியும் பெண்ணினத்தை,

அழப்படி

அகலப் படி; உனக்கு

அனைத்து பாடங்களும்

ஆகவேண்டும் அத்துபடி

படித்தால் முன்னேற்றம் வரும்

படிப்படி: அடி பெண்ணே

பெண்ணுக்கு முக்கியம் படிப்படி

என்று கல்வி கற்க கோரிக்கை வைக்கிறார் (Vaali, 2018). பெண் சமூகத்தை எது கை விட்டாலும், வளர்த்த தந்தை கைவிட்டாலும், தாய் கைவிட்டாலும் கல்வி கை கொடுக்கும். அது மட்டுமில்லை ஒரு பெண் கல்வி கற்றால் பெண் குழந்தைகளை நேரான வழியில் பழக்குவாள். பெண்களுக்கு கல்வி பயிற்றுவதால் நாம் படித்த குடும்பங்களை உண்டாக்குகிறோம். பையன் ஒருவனை படிக்க வைப்பதால் நாம் படித்த ஒருவனை மாத்திரம் பெருகின்றோம் என குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது (Kanthaiya, 2019).

## பெண் சிசுக்கொலை

கவிஞர் வாலி தன் கவிதை, கதை, கட்டுரை, நாவல்களுக்கான பாடு பொருட்களை இந்த உலகின் நிகழ்வுகளில் இருந்தே எடுத்தாண்டுள்ளார். சமூகத்தின் ஒவ்வொரு அசைவையும் அழகாக எடுத்துகாட்டுகிறார். மேலும் ஆச்சிக்கலுக்கு உரிய காரணம் எது என்பதை ஆராய்கிறார். பின்னர் அதற்கான தீர்வை பற்றியும் தெளிவாக சிந்தித்து தம் படைப்புகளில் தந்திருக்கிறார்.

பெண் குழைந்தைகளைக் கள்ளிப்பால் கொடுத்து கொல்லும் வழக்கம் இன்று ஓரளவு குறைந்திருக்கிறது. எனினும் பல கிராமங்களிலும், ஏன் நகரங்களிலும் இந்நிலை கால வளர்சிக்கேற்ப மறை முகமாக நடந்து வருகிறது வேதனை அளிக்கிறது. இதை கவிஞர் வாலி படைப்புகளில் எடுத்து காட்டத் தவறவில்லை

ஓர் அவளால்தான் அவன் வந்ததை

அவள் அவனுக்கு அறிவுறுத்த

ஏற்றான் இல்லாள் சொல்லை

எறிந்தான் கள்ளிப்பால்; நெல்லை

என்று பெண் குழந்தைகள் பிறந்தாலே ஒன்று அந்த குழந்தை கொல்லப்படுகிறது; அல்லது குப்பைதொட்டியில், கால்வாயில், எரிகளின் புதர் காடுகளில் போடப்படுகிறது. இந்நிலையை மாற்ற நல்ல விழிப்புணர்வை அரசு ஏற்படுத்த வேண்டும் (Vaali, 2018).

## வரதட்சணை கொடுமை

மனிதனுடைய வாழ்க்கை போராட்டம் மளிந்தாயிருக்கின்றது. இப்போராட்டத்தை ஆண் பெண் இருவரும் சேர்ந்து ஆதி முதல் நடத்தி வருகிறார்கள். ஆண் பெண் இருவரும் சேர்ந்து ஒரே நோக்கத்துடன் ஒருமித்து வாழும் வாழ்க்கையே திருமணம் எனப்படுகின்றது. உறவினர் அனைவரும் மகிழ்ச்சி அடைவர். ஆனால் இன்றோ திருமணமாக வேண்டிய அந்தக் கன்னிகள் வரதட்சணை கொடுமைகளால் திருமணம் செய்து கொள்ள இயலாமல் முதிற்கன்னியாக பல பெண்கள் வருந்தி கொண்டிருக்கின்றனர். மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் வரதட்சிணை கொடுமையை,

கையில் நாலு

காசிருந்தால் தானே

நாளைக்கு

நல்ல மாப்பிள்ளையை

விலை பேசி

வாங்க முடியும் (Vaali, 2018)

பொன் அள்ளி வைத்தால் தானே

பூமாலை தோளில் ஏறும்

இல்லாத எழையர்க்கெல்லாம்

பொல்லாத தனிமைக்கோலம்

என பெண்கள் நல்ல சம்பாதித்தால் அவர்களுக்கு வரும் மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் வரதட்சிணை கொடுக்க முடியும், தனக்குரிய கணவனை விலைபேசி வாங்க முடியும் என பெண்கள் பேசுவதாக எடுத்துக் காட்டுகிறார். திருமணத்தின் போது பெண்ணுக்காக கொடுக்கப்படும் பொருளோடு அவள் மரியாதையும் இணைக்கப்பட்டிருப்பதாக கருதப்பட்டது என்ற கருத்தையும் கூர்ந்து கவனத்தில் கொள்ளதக்கது (Vaali, 2010).

## குடும்பக்கட்டுப்பாடு

மக்கள் தொகையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர குடும்ப கட்டுப்பாடு அவசியம் என்று ஒவ்வொரு குடும்பமும், குடும்பத்தில் உள்ளோரும் உணர வேண்டும். சமூகத்தில் குடும்பக் கட்டுப்பாடு

என்றால் பெண்ணிடம் விட்டு ஆண்கள் ஒதுங்கி விடுகின்றனர். ஆனால் பெண்களை விட ஆண்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. மக்கள் தொகையைக் கட்டுப் படுத்தினால் தான் வளர்ச்சி திட்டங்களைச் சீராக சிறப்பாக செயல் படுத்த முடியும் என்பதைக்

கணக்காகப் பிள்ளை

பெறுகின்ற திட்டம்

எனக்காக தானோ

ஏற்பட்ட சட்டம்

அளவான குடும்பமே வளமான வாழ்வு வாழ முடியும். அதிக குழந்தை செல்வங்களைப் பெற்றுக் கொள்வதினால் இன்றைய காலகட்டத்தில் செலவினங்கள் மற்றும் பராமரிப்பு, தாயின் உடல்நலம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதைக் கவிஞர் வாலி விளக்கியுள்ளார் (Vaali, 2010).

குடும்பக் கட்டுப்பாடு என்பது நம் குடும்பத்தின் வம்ச விருத்தி கட்டுப்படுத்தல் என்றாலும், அரசின் நோக்கமும், தனிமனித செயலால் பாதிக்கப் படுகின்றன என்ற கருத்தினை உள்வாங்கி சமுதாய வளர்ச்சியில் அக்கறை கொண்ட யாவரும் அரசோடு இணைந்து விழிப்புணர்வையும், புதிய சட்ட திட்டங்களையும், வரவேற்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் கடமை.

## விலைவாசிக் கொடுமை

நல்ல திட்டங்களுக்கு வரவேற்பது போன்று ஏழை எளிய நடுத்தர மக்களை வஞ்சிக்கும் திட்டங்களை அரசுக்கு எடுத்துக் காட்ட வேண்டியது சமுதாய சிந்தனையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், படைப்பாளர்கள் மேல் விழுந்த கடமையாகும். மக்களைக் காக்க வேண்டிய அரசு வரி என்கிற பெயரில் கொடுமை போக்கினைக் கவிஞர் கண்டிக்கிறார்.

அனைத்தும் ஆணைவிலை; குதிரை விலை

குபேரனுக்கும் வரலாம்

குசேலர் நிலை

மலையேற்றம் போல்

விலையேற்றம் (Vaali, 2018)

நான் ஏறுகிறேன் என்பதால்

தான் ஏறுகிறேன் என்கிறது

கோயம்பேடு

கோவக்காய்; ஆவக்காய்

அடியேன் மலைவாசி; அதுபோல்

ஆக விரும்புகிறது விலைவாசி

நாட்டு மக்களின் அன்றாடம் தொடங்கி எல்லாமும் ஒன்றோடு ஒன்று சார்ந்து வாழும் வாழ்க்கையை வாழுகின்றனர் (Vaali, 2018). பெட்ரோல் விலையை அரசு உயர்தினால், போக்குவரத்துகாரர்கள், இரு சக்கன வாகனத்தினர்களுக்கு மட்டுமே பிரச்சினை இல்லை அது அடித்தள மக்களான ஏழைக் குடிசையில் வாழும் குப்பன் தொடங்கி ஆகாய விமானத்தில் பறக்கும் மனிதன் வரை பாதிக்கிறது. கடுமையான விலை வாசியால் பெரும் பணக்காரர்கள் பாதிப்படைவதை விட ஏழைகள் பாதிப்படைவதே பெருங்கொடுமை என வேதனையை வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர் வாலி. விலை வாசி தனிமனித ஒவ்வொரு குடும்பத்தையும், பாதிப்பதனால் ஒரு நல்ல அரசு மக்களை

கொடுமைப்படுத்தாமல் மக்களின் சுமையைக் குறைக்க முன் வர வேண்டும் என்ற கருத்தைக் கூறுவதன் மூலம் அடித்தள மக்களின்பால் அக்கறை கொண்டவராகக் கவிஞர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார்.

## முடிவுரை

சாதி மத வெறி ஆறறிவு படைத்த மனிதனை விலங்கிற்கு இணையாக மாற்றி விடுகின்றது. மன நோயாக மாறிப்போன சாதியச் சிந்தனை களைந்து நல்லெண்ணத்தைக் கடைபிடித்து வாழ வேண்டும் என்பதே கவிஞர் வாலியின் விருப்பம் ஆகும் பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, பெண்ணுக்குரிய மாண்போடு நடத்த வேண்டும். பெண் சிசுகொலையும், வரதட்சணை கொடுமையும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய இரண்டையும் சமூகத்தில் இருந்து அழித்தொழிக்க பட வேண்டும் என்கிறார் அரசின் எல்லாத் திட்டத்தையும் ஆதரிக்காமல் மக்களுக்கான திட்டத்தை ஆதரித்தும் விரோதமான திட்டத்தை எதிர்த்தும் வாழவேண்டுமென்று விரும்புகிறார். சமுதாயத்தில் நிகழ்கின்ற நடைமுறை செய்திகளை மக்கள் மனதில் பதியும் படி எடுத்துரைத்துள்ளார் கவிஞர் வாலி. இவருடைய இக்கவிதைகளை படிக்கும் போது இச்சமூகத்தில் நடைபெறும் கொடுமை செயலுக் கெதிராக கிளர்ந்து தட்டி கேட்க வேண்டும் என்ற எண்ணத்தை ஒவ்வொரு சக மனிதனின் மனதிலும் விதைக்கிறது என்பது மறுக்க இயலாத ஒன்று.

## References

Bharathiyar, (2011) Bharathiyar Kavithaikal, Aruna Pathippagam, Chennai, India.

Kanthaiya, N.C., (2019) Pengal samuthaiyam andrum endrum, Paari Nilaiyam, Chennai, India.

Paramasivanandham, A.M., (2019) Padaippukal, Tholamai Pathippagam, Chennai, India.

Vaali, (1995) Naaival, Kumaran Pathippagam, Chennai, India.

Vaali, (2018) Varumthorum Vaali, Kumaran Pathippagam, Chennai, India.

Vaali, (2010) Vaali 1000 Thiraiisai Padalgal- Thoguthi-2, Kumaran Pathippagam, Chennai, India.

Vaali, (2013) Nija Govindham, Kumaran Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License